தூய ஆரோக்கிய அன்னை திருவிழா

நவநாள் தயாரிப்பு

தூய ஆரோக்கிய அன்னை

அனைத்துலகின் அரசி

September 03, 2021

அன்பில் இணைவோம்

அருட்பணி: ஆண்டவருடைய மீட்பை அறிவியுங்கள்
அவருடைய அரும்பெரும்செயல்களை எடுத்தியம்புங்கள்

Priest : Announce the salvation of the Lord
Proclaim his works among the people

மக்கள்: என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்
People: His mercy is everlasting

அருட்பணி: இறைவார்த்தையால் இவ்வுலகை ஒளிர்வித்த
இறைவனை நாம் வாழ்த்துவோம்
Priest : Bless the Lord our God
Who sent the Word of life into the World

அருட்பணி: ஆண்டவர் தம் செயல்களில் நீதியுள்ளவர்
அவருடைய செயல்கள் புனிதமானவை
அனைத்துலகே ஆண்டவரைப் புகழ்வாயாக
உயிருள்ள அணைத்தும் அவரின் திருநாமத்தை வாழ்த்துவதாக
People: Just is the Lord in all His ways
And Holy in all His works
Let every creature praise Him
and all living beings bless his name

புகழ்வோம் நம் அன்னையை

மாசில்லாக் கன்னியே மாதாவே உன்மேல்
நேசமில்லாதவர் நீசரேயாவார்
வாழ்க வாழ்க வாழ்க மரியே...

மூதாதை தாயார்செய் முற்பாவமாற்றாய்
ஆதியில்லாதோனை மாதே நீ பெற்றாய்
வாழ்க வாழ்க வாழ்க மரியே...

உம்மகன் தாமே உயிர்விடும் வேலை
என்னை உம் மைந்தனாய் ஈந்தனரன்றோ?
வாழ்க வாழ்க வாழ்க மரியே...

தாயே நீ ஆனதால் தாபரித் தென்மேல்
நேசம் வைத்தாள்வது நின் கடனாமே
வாழ்க வாழ்க வாழ்க மரியே...

திருப்பாடலில் செபிப்போம் : திருப்பாடல்: 44:1-16

ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும்
என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்.

கடவுளே எங்கள் காதுகளால் நாங்களே கேட்டிருக்கின்றோம்;
எங்கள் மூதாதையர் அவர்கள் காலத்திலும் அதற்குமுன்பும்
நீர் என்னென்ன செய்துள்ளீர் என்று எங்களுக்கு எடுத்துரைத்தனர்
உமது கையால் வேற்றினத்தாரை விரட்டியடித்தது
எந்தையரை நிலைநாட்டினீர்: மக்களினங்களை நொறுக்கிவிட்டு
எந்தையாரை செழிக்கச் செய்தீர்.
ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும்
என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்.

அவர்கள் தங்கள் வாளால் நாட்டை உடைமையாக்கிக்கொள்ளவில்லை
அவர்கள் தங்கள் புயத்தால் வெற்றிபெறவில்லை
நீர் அவர்களில் மகிழ்ச்சியுற்றதால் உமது வலக்கையும்
உமது புயமும் உமது முகத்தினொளியுமே அவர்களுக்கு வெற்றியளித்தன.
ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும்
என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்.
நீரே என் அரசர். நீரே என் கடவுள்!
யாக்கோப்புக்கு வெற்றியளிப்பவர் நீரே.
எங்கள் பகைவர்களை உமது துணையால் தாக்கி வீழ்த்துவோம்.

எங்களுக்கு எதிராய் எழுந்தோரை
உமது பெயரால் மிதித்துப் போடுவோம்.

ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும்
என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்.

என் வில்லை நான் நம்புவதில்லை.
என் வால் என்னைக் காப்பாற்றுவதுமில்லை.
நீரே பகைவரிடமிருந்து எண்களைக் காப்பாற்றினீர்.
எங்களை வெறுப்போரை வெட்கமுறச்செய்தீர்.

ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும்
என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்.

எந்நாளும் கடவுளாம் உம்மை நினைத்துப் பெருமைகொண்டோம்.
என்றென்றும் உமது பெயருக்கு நன்றிசெலுத்திவந்தோம்.
ஆயினும் இப்போது நீர் எங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டீர்.
இழிவுபடுத்திவிட்டீர். எங்கள் படைகளுடன் நீர் செல்லாதிருக்கின்றீர்.

ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும்
என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்.

எங்கள் பகைவருக்கு நாங்கள் புறங்காட்டி ஓடும்படிச் செய்தீர்.
எங்களைப் பகைப்போர் எங்களைக் கொள்ளையிட்டனர்.
உணவுக்காக வெட்டப்படும் ஆடுகளைப்போல எங்களை ஆக்கிவிட்டீர்.
வேற்றினத்தாரிடையே எங்களைச் சிதறி ஓடச்செய்தீர்.

ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும்
என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்.

நீர் உம் மக்களை அற்ப விலைக்கு விற்றுவிட்டீர்.
அவர்கள் மதிப்பை மிகவும் குறைத்துவிட்டீர்.
எங்களை, அடுத்து வாழ்வோரின் பழிப்புக்கு ஆளாக்கினீர்.
எங்கள் சுற்றுப்புறத்தாரின் ஏளனத்துக்கும்
இகழ்ச்சிக்கும் எங்களை உள்ளக்கினீர்.

ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும்
என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்.

வேற்றினத்தாரிடையே எங்களை ஒரு பழிச்சொல்லாக்கினீர்;

ஏனைய மக்கள் எங்களைப் பார்த்து தலையசைத்து நகைக்கின்றனர்.
எனக்குள்ள மானக்கேடு நாள்முழுவதும் என் மனக்கண்முன் நிற்கின்றது
அவமானம் என் முகத்தை மூடியுள்ளது.

ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும்
என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்.

என்னைப் பழித்துத் தூற்றுவோரின் குரலை நான் கேட்கும்போது
என் எதிரிகளையும் என்னைப் பழிவாங்கத் தேடுவோரையும்
நான் பார்க்கும்போது வெட்கிப் போகிறேன்.

ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும்
என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்.

Psalm 44
National Lament and Prayer for Help

1 We have heard with our ears, O God,
our ancestors have told us,
what deeds you performed in their days,
in the days of old:
2 you with your own hand drove out the nations,
but them you planted;
you afflicted the peoples,
but them you set free;
3 for not by their own sword did they win the land,
nor did their own arm give them victory;
but your right hand, and your arm,
and the light of your countenance,
for you delighted in them.
4 You are my King and my God;
you command[a] victories for Jacob.
5 Through you we push down our foes;
through your name we tread down our assailants.
6 For not in my bow do I trust,
nor can my sword save me.
7 But you have saved us from our foes,

and have put to confusion those who hate us.
8In God we have boasted continually,
and we will give thanks to your name forever.*Selah*
9 Yet you have rejected us and abased us,
and have not gone out with our armies.
10 You made us turn back from the foe,
and our enemies have gotten spoil.
11You have made us like sheep for slaughter,
and have scattered us among the nations.
12You have sold your people for a trifle,
demanding no high price for them.
13You have made us the taunt of our neighbors,
the derision and scorn of those around us.
14You have made us a byword among the nations,
a laughingstock[b] among the peoples.
15All day long my disgrace is before me,
and shame has covered my face
16at the words of the taunters and revilers,
at the sight of the enemy and the avenger.

இறைவார்த்தைக்குச் செவிமடுப்போம்.

புனித லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். லூக்கா. 1 ; 26 - 38

ஆறாம் மாதத்தில் கபிரியேல் என்னும் வானதூதரை கடவுள் கலிலேயாவிலுள்ள நாசரேத்து என்னும் ஊரிலிருந்த ஒரு கன்னியிடம் அனுப்பினார். அவர் தாவீது குடும்பத்தினராகிய யோசேப்பு என்னும் பெயருடைய ஒருவருக்கு மண ஒப்பந்தமானவர். அவர் பெயர் மரியா. வானதூதர் மரியாவுக்குத் தோன்றி, "அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்" என்றார். இவ்வார்த்தைகளைக் கேட்டு அவர் கலங்கி, இந்த வாழ்த்து எத்தகையதோ என்று எண்ணிக்கொண்டிருந்தார். வானதூதர் அவரைப்பார்த்து, "மரியா அஞ்சவேண்டாம். கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர். இதோ கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர். அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். அவர் பெரியவராயிருப்பார். உன்னதக்கடவுளின் மகன் எனப்படுவார். அவருடைய தந்தை தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தின்மீது என்றென்றும்

ஆட்சி செலுத்துவார். அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது" என்றார். அதற்கு மரியா வானதூதரிடம், "இது எப்படி நிகழும்? நான் கன்னியாயிற்றே?" என்றார். வானதூதர் அவரிடம், "தூய ஆவி உம்மீது வரும். உன்னதக் கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலின் உம்மிடம் பிறக்கப்போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும். உம் உறவினராகிய எலிசபெத்தும் தம் முதிர்ந்த வயதில் ஒரு மகனை கருத்தரித்திருக்கிறார். கருவுற இயலாதவர் என்று சொல்லப்பட்ட அவருக்கு இது ஆறாம் மாதம். ஏனெனில் கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை" என்றார். பின்னர் மரியா, "நான் ஆண்டவரின் அடிமை; உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்றார். அப்பொழுது வானதூதர் அவரை விட்டு அகன்றார்.

இது கிறிஸ்துவின் வாழ்வுதரும் நற்செய்தி.

கிறிஸ்துவே உம்மைப் புகழ்கின்றோம்.

A reading from the holy gospel according to Luke. Luke 1:26-38

26In the sixth month the angel Gabriel was sent by God to a town in
Galilee called Nazareth, 27to a virgin engaged to a man whose name
was Joseph, of the house of David. The virgin's name was Mary. 28And
he came to her and said, "Greetings, favored one! The Lord is with
you."[a] 29But she was much perplexed by his words and pondered
what sort of greeting this might be. 30The angel said to her, "Do not be
afraid, Mary, for you have found favor with God. 31And now, you will
conceive in your womb and bear a son, and you will name him Jesus.
32He will be great, and will be called the Son of the Most High, and the
Lord God will give to him the throne of his ancestor David. 33He will
reign over the house of Jacob forever, and of his kingdom there will be
no end." 34Mary said to the angel, "How can this be, since I am a
virgin?"[b] 35The angel said to her, "The Holy Spirit will come upon you,
and the power of the Most High will overshadow you; therefore the
child to be born[c] will be holy; he will be called Son of G9od. 36And
now, your relative Elizabeth in her old age has also conceived a son;
and this is the sixth month for her who was said to be barren. 37For
nothing will be impossible with God." 38Then Mary said, "Here am I,

the servant of the Lord; let it be with me according to your word.” Then the angel departed from her.

இறை வார்த்தையை உள்ளத்தில் இருத்தி சிந்திப்போம்.

நம் உள்ளத்தில் எழும் மன்றாட்டுக்களை நம் ஆரோக்கிய அன்னை வழியில் ஆண்டவர் இயேசுவிடம் சமர்ப்பிப்போம்.

1. அன்னையாம் திருச்சபைக்காக மன்றாடுவோம். நம் தாயத் திருச்சபையை வழிநடத்தும் நமது திருத்தந்தை பிரான்சிஸ் நமது பேராயர் ஜோஸ் கோமஸ், மற்றும் நமது இணை ஆயர்கள் குருக்கள், இறைமக்கள் நம் அன்னை மரியாவைப் போல ஆவியின் வரங்களால் நிரப்பப்பட்டு எல்லோரையும் மகிழ்விக்கும் நற்செய்தியின் கருவிகளாகத் திகழ்ந்திட ஆண்டவரே அன்னை மரியா வழியாக உம்மை மன்றாடுகின்றோம். இறைவா!

   இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நங்கள் கேட்கும் மன்றாட்டுகளுக்குச் செவிசாய்த்தருளும்

2. நமது தளத்திருச்சபைக்காக மன்றாடுவோம். நமது தலைமை ஆயர் மற்றும் இணை ஆயர்கள் நமது மறைமாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பங்களிலும் இறைவார்த்தையின் ஒளியால் நிரப்பப்பட்டு மகிழ்ச்சியிலும் மனநிறைவிலும் நாளுக்கு நாள் வாழ்ந்திட வளர்ந்திட ஆண்டவரே அன்னை மரியா வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

   இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நங்கள் கேட்கும் மன்றாட்டுகளுக்குச் செவிசாய்த்தருளும் .

3. அமெரிக்கா வாழ் இந்தியர்களுக்காகவும் அவர்களின் குடும்பங்களுக்காகவும் மன்றாடுவோம். அன்பிலும் மகிழ்ச்சியிலும் ஒன்றுபட்டு வாழ்ந்து உலர்கிற்கு ஒளியாய்த் திகழ்ந்திட ஆண்டவரே அன்னை மரியாவழியாக உம்மை மண்டாடுகின்றோம்.

   இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நங்கள் கேட்கும் மன்றாட்டுகளுக்குச் செவிசாய்த்தருளும் .

4. புனித ஆரோக்கிய அன்னை பக்தர்களுக்காக மன்றாடுவோம். அன்னை மரியா போல பிறரன்பிலும் இறையன்பிலும் நாளுக்கு நாள் வாழ்ந்து நற்செய்திக்குச் சான்றுபகர்ந்திட அருள்வேண்டி ஆண்டவரே அன்னை மரியா வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

   இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நங்கள் கேட்கும் மன்றாட்டுகளுக்குச் செவிசாய்த்தருளும் .

5. இந்தியாவிலும் உலகின் பல்வேறு நாடுகளிலும் கோவிட்-19 நோய் தொற்றால் இறந்த ஆன்மாக்களுக்கு நித்ய இளைப்பாற்றியை தந்தருளவும் நோய் தொற்றால் துன்புறுவோர்க்கு விடுதலையையும் மருத்துவ குழுவினருக்கு பாதுகாப்பும் தந்தருள ஆண்டவரே அன்னை மரியா வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

   இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நங்கள் கேட்கும் மன்றாட்டுகளுக்குச் செவிசாய்த்தருளும் .

6. நமது தனிப்பட்ட தேவைகளுக்காக: ....ஆண்டவரே அன்னை மரியா வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

   இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நங்கள் கேட்கும் மன்றாட்டுகளுக்குச் செவிசாய்த்தருளும் .

விண்ணகத்தில் இருக்கின்ற ...

தூய ஆரோக்கிய அன்னை நவநாள் செபம்

மகா பரிசுத்த கன்னிகையே! இயேசுவின் தயாராயிருக்குமாறு
பரிசுத்த மூவொரு கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்ட தூய கன்னிமரியே!
கடவுளுடைய திருப்புதல்வர் உமது திருஉதரத்தில்
மனிதராக அவதரித்தபோதும் ஒன்பது மாதமளவாக
அவரை உமது மாசணுகாத கருவில் தாங்கியபோதும்
நீர் அடைந்த பேரின்பத்தை உமது ஊழியர்களாகிய நாங்கள்

நினைவுகூர அருள்கூர்ந்தமைக்கு உமக்கு நன்றி கூறுகின்றோம்.
எமது அன்பினாலும் தூய வாழ்வினாலும் நீர் அடைந்த பேரின்பத்தை
நாங்களும் அடைய எங்களுக்காக மன்றாடும் தாயே!
துன்பப்படுவோரின் தாயே! இரக்கமிக்க அன்னையே!
நீர் அனுபவித்த பேரின்பத்தைக் கொண்டாடுபவர்களுக்கு
நீர் வாக்களித்துள்ள விசேஷ உதவியையும் பாதுகாப்பையும்
எங்களுக்கு இவ்வேளையில் பெற்றுத்தந்தருளும்.
கேளுங்கள் கொடுக்கப்படும் என்ற உம்மகன் இயேசுக்கிறிஸ்துவின்
வல்லமைமிக்க வார்த்தையில் நம்பிக்கைகொண்டு
உமது வல்லமைமிக்க மன்றாட்டுகளில் நம்பிக்கைகொண்டு
இந்த நவநாட்களில் நாங்கள் செய்யும் விண்ணப்பங்களை
கடவுளுடைய திருவுளத்திற்கு மாறாயிருந்தால்
எமக்கு எவ்வரம் மிகவும் தேவையோ அவற்றைப் பெற்றுத்தந்தருளும்.

(இங்கு நமது மன்றாட்டுகளை நினைவிற்கொள்ளவும்).

இறைவனின் தாயே! இப்போது உமக்கு வணக்கமாக
நாங்கள் செய்யும் இந்த நவநாளை உம்மில்கொண்டிருக்கும்
ஆழ்ந்த நம்பிக்கையின்பொருட்டு செய்கின்றோம்.
இயேசு மனிதராக அவதரித்தபோது
உமது திருவுளம் அடைந்த தெய்வீக மகிழ்ச்சியை
அதற்கு வணக்கமாக நாங்கள் செய்யும் இந்த நவநாள் பக்தி முயற்சியையும்
இப்பொழுது நாங்கள் சொல்லப்போகும்
அருள் நிறைந்த செபத்தையும் அன்போடு ஏற்றுக்கொள்ளும் தாயே!.

(9 -முறை அருள் நிறைந்த செபம்).

நீர் அணிந்த மணிமுடியில்,
எம் செபங்கள் அத்தனையும் விண்மீன்களென துலங்குமென
ஆழ்ந்த நம்பிக்கைகொள்கிறேன்.
வருந்துவோர்க்கு ஆறுதலே! எம் வேளைநகர் ஆரோக்கியத்தாயே!
நாங்கள் உம்மிடம் மன்றாடும் விண்ணப்பங்கங்கள் நிறைவேறுமாறு
உமக்கு வணக்கமாக இதுவரை புனிதர்களால் செய்யப்பட்ட
எல்லா அரும்பெரும் நிகழ்வுகளையும் உமக்கு ஒப்புக்கொடுக்கின்றேன்
உமது திருமகனும் எங்கள் ஆண்டவருமான

இயேசு கிறிஸ்துவின் திருஇதயத்தில் பொங்கி வழியும் பேரன்பையும்
அதுபோன்ற உமது அன்பையும் நினைவிற்கொண்டு
உமது அடியார்களாகிய எங்கள் செபத்தை ஏற்று
எம் மன்றாட்டுகளை அடைந்து தந்தருளும் அம்மா. ஆமென்.

அன்னைக்கு நம் அஞ்சலி.

ஆரோக்கிய மாதாவே - உமது
புகழ்ப்பாடி துதித்திடுவோம்
எந்நாளும் பாடித்துதித்திடுவோம்

அலைகள் மோதிடும் கடற்கரைதன்னில்
வாசித்திட ஆசை வைத்தாயே
பல வகை கலைகளும் பரிலினில் துலங்கிட
அனைவருக்கும் துணைபுரிந்தாயே.

தேன்கமலும் சோலை சூழ்ந்து விளங்கும்
வேளாங்கண்ணியில் அமர்ந்தாயே
வானகமும் இந்த வையகமும்
செழித்தோங்கிட அருள் புரிந்தாயே

செபிப்போமாக

தந்தையே இறைவா!
உம் திருமகனின் தாயை எங்களுக்கு
அரசியாகவும் அன்னையாவும் தந்தருளத் திருவுளமானீரே!
உம் திருமகன் முற்றிலும் கீழ்ப்படிந்து சாவை ஏற்றுக்கொண்டதுபோலவே
அவரை மகிமையில் மணிமுடிசூட்டி அரசருக்கெல்லாம் அரசராகவும்
ஆண்டவருக்கெல்லாம் ஆண்டவராகவும் உமது வலப்பக்கம் அமரவைத்தீர்.
உம் ஊழியராகிற தூய கன்னிமரியா
தம் மகனின் துயரத்திலும் வேதனையிலும் பங்கெடுத்ததால்
விண்ணகத் தூதரணிக்கும் மேலாக உயர்த்தி
அவரோடு அரசாளும் அரசியாகும் பேற்றினையளித்து

உமது பிள்ளைகளாகிய எங்களுக்காக பரிந்து பேசுபவராகவும்
உமது அருளை பெற்றுத்தருபவராகவும்
படைப்பிற்கெல்லாம் அரசியாகவும் உயர்த்தினீர்.
அந்த திருத்தாயரின் வேண்டுதல்களின் பெறுபலன்களால்
விண்ணக மகிமையைப் பகிர்ந்திட வந்தருள்வோமாக.
உம்மோடு தூய ஆவியின் ஒன்றிப்பில் இறைவனாய் வாழ்ந்து
ஆட்சி செய்கின்ற எங்கள் ஆண்டவராகிய
இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்

தூய ஆரோக்கியத் தாயே
படைப்பனைத்தின் அரசியே
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்